**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் நாள்**
**CC.90/2017**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் திரு.த. யுவராஜ் அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனிவாசன் | வயது | : | 52 |
| க.பெ | : | கிருஷ்ணன் | நிலை | : | **PW- 1(LW1)** |

Accused is present with counsel. Learned APP present.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கள்ளிக்காட்டு தெரு, மேல்புவனகிரியில் வசிக்கிறேன். வழக்கு விபத்தில் இறந்த ஆட்சியம்மாள் எனது அம்மா. ஆஜர் எதிரியை தெரியாது . கடந்த 2017-ம் வருடம் மாலை 5.00 மணிக்கு கடைக்கு சென்று திரும்ப வீட்டுக்கு வரும்போது நடேசன் என்ற பஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் நேராக சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருந்த எனது அம்மாவை பார்த்தேன். மேற்படி விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி எனது **கையொப்பத்துடன் கூடிய புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தை ஏற்படுத்திய நடேசன் என்ற பேருந்தின் பதிவெண் மற்றும் ஓட்டுநரின் பெயர் மற்றும் யாரால் விபத்து ஏற்பட்டது எப்படி ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. விபத்து குறித்து கேள்விப்பட்டு தான் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 27.01.2017-ம் தேதி மாலை 5.00 மணிக்கு ஆஜர் எதிரி அரியலூர் to சிதம்பரம் மார்க்கமாக TN- 61- J 7979 என்ற நடேசன் பேருந்தை அதிவேகமாகவும், அஜாகிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து எனது அம்மா மீது பேருந்தின் முன் வலது பக்கம் மோதியதில் எனது அம்மா பேருந்தின் நடுப்பகுதியில் விழுந்து வலது பின் சக்கரம் அவர் தலையில் ஏறி மண்டை உடைந்து, மூளை சிதறி, இடது கால் நசுங்கி அதே

இடத்தில் இறந்துவிட்டார் என்று தகவல் பெற்றதாக புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து நடந்த சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய நடேசன் பேருந்து மற்றும் அந்த வாகனத்தின் பதிவெண் போன்ற விபரங்களை என்னிடம் யார் சொன்னது என்றால் வெற்றிவேல் என்பவர் சொன்னார். நான் கொடுத்த புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரமான விபத்து ஏற்படுத்திய பேருந்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் வந்தது என்பதை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவினை நான் எழுதவில்லை. இவ்வழக்கின் எதிரி பற்றிய விபரங்களை போலிசார் என்னிடம் சொன்னார்கள் என்றாலும், நேரடியாக எனக்கு தெரியாது என்றாலும் சரிதான்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**